# மரபுவழிக் கல்வியைப் பாதுகாக்க முயன்ற நிறுவனங்கள்

## ஈழத்தினை மையப்படுத்திய சிறப்பாய்வு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

பாரம்பரியமான கற்பித்தல், கற்றல் முறைகள், பாடத்திட்டங்கள் முதலானவற்றுக்கூடாக முன்னெடுக்கப்படும் கல்விப் போதனையையே மரபுவழிக்கல்வி எனக் குறிப்பிடலாம். ஈழத்தினைப் பொறுத்தமட்டில் சைவசமயக் கல்வியும் தமிழ் மொழி மற்றும் அறிவியல் பண்பாடு முதலான விடயங்களும் ஒருங்கு சேர இம் மரபுவழிக் கல்விக்கூடாகக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. பாரம்பரியக் கல்வி, திண்ணைப்பள்ளிக் கல்வி, குருசிஷ்யக் கல்வி, குருகுலக்கல்வி முதலான பெயர்களாலும் இக் கல்விமுறை குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. இம் மரபுவழித்தமிழ்க் கல்விக்கான ஊற்றுக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஈழத்தில் காலூன்றியிருந்ததைக் காணலாம்.

### மரபுவழித் தமிழ் கல்வியின் ஊற்றுக்களும் ஓட்டங்களும்

ஈழத்தமிழர் வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிவதில் ஏற்பட்டுள்ள தடைகள் கி.பி 14 ஆம் நூற்றாண்டு

வரையில் மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை அறிந்து கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன. மேற்குறித்த கால எல்லையில் வாழ்ந்த புலமையாளர்கள் பற்றியோ, அவர்களின் பங்களிப்புக்கள் குறித்தோ அறிதற்குரிய உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. தமிழ்ப் புலமையாளர்களுக்கும் அவர்களது படைப்புக்களுக்கும் போதிய நிறுவன ரீதியான பாதுகாப்பு இல்லாமையாலும், நாட்டில் அவ்வப்போது நிகழ்ந்துவந்த படையெடுப்புக்களாலும், கையளிப்புப் பாரம்பரியத்தில் காணப்பட்ட குறைபாடுகளாலும் ஆரம்பகாலங்களில் தோன்றிய இலக்கியங்கள் அழிந்திருக்க வேண்டும். ஈழத்து இலக்கிய வரலாற்றாசிரியர்கள் 'ஈழத்துப் பூதந்தேவனார' என்னும் புலவருடன் இக்கல்விப் பாரம்பரியத்தினைத் தொடங்குவது வழமையெனினும் அப்பெயருடன் இணைந்து வந்துள்ள 'ஈழம்' என்னும் அடையைத் தவிர பூதந்தேவனாரை ஈழத்தவராகக் காட்டக் கூடிய பிற ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை. எனினும், ஈழத்தில் பரவலாகக் கிடைக்கப் பெற்றுவரும் கல்வெட்டுக்கள் வாயிலாக மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை ஓரளவுக்குத்தானும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

கி.பி 14 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய யாழ்ப்பாண மன்னர்கள், தமிழ் வன்னியர்கள் ஆட்சி ஈழத்தில் மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் செழிப்படைய வழிகோலியது. தமிழ் மன்னர்களால் தமிழ் பிரதேசங்கள் ஆளப்பட்ட இச் சூழலில் சைவத்தமிழ்க் கல்விப்பாரம்பரியம் தனது ஆளுமையைப் பலகோணங்களிலும் வளர்த்துக் கொண்டதைக் காணலாம். தமிழ் மன்னர்களின் ஆதரவும், சமகாலத்தில் தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே காணப்பட்ட பண்பாட்டு உறவுகளும், சைவ சமயம் பெற்றிருந்த முதன்மையும், தமிழகத்திலிருந்து நிகழ்ந்த பல குடியேற்றங்களும் ஈழத்தின் சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குப் புது ஊட்டத்தினை நல்கின. தலபுராணங்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் என ஆக்க இலக்கியத்துறை சார்ந்தும், வைத்தியம், சோதிடம் முதலான அறிவியல் துறை சார்ந்தும், வரலாற்றுணர்வுடனும் இலக்கியங்களைப் படைக்கக் கூடிய ஆற்றல் மிகுந்த புலவர்கள் பலர் இக்காலத்தில் வாழ்ந்ததை நோக்குகின்றபோது ஈழத்து மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் வீச்சினைப் புரிந்து கொள்ள முடியும்.

ஈழத்து மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்கு தமிழ் மன்னர்கள், வன்னியர்கள் காலத்தைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர் காலப்பகுதி சோதனை மிகுந்த காலமாகவே இருந்தது. ஈழத்தைக் கைப்பற்றி ஆண்ட அந்நியரகளான போர்த்துக்கேயர்கள் இலாபமீட்டுதலையும், கத்தோலிக்க மதம் பரப்புதலையும் தமது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர். தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுச் சுதேச மதங்களை அவர்கள் தடைசெய்தனர். இச் சூழலில் சைவமும் சைவத் தமிழ்ப் பண்பாடும் பின்னடைவைச் சந்திக்க, அதன் பின்னணியில் மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியமும் தனது செல்வாக்கை இழந்தது. எனினும், போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஈழத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தர் காலப்பகுதியில் ஈழத்து மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் மீண்டும் தன் ஆளுமையை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒல்லாந்தர்கள் சுதேசமதங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்காமையே இதற்குக் காரணம் எனலாம். போர்த்துக்கேயர் காலப்பகுதியில் ஏற்பட்ட கோவில்களின் அழிவு, மத நம்பிக்கை இழப்பு, சமய சடங்காசாரங்கள் பற்றிய தெளிவின்மை என்பவற்றை நீக்குமுகமாகப் பல படைப்புக்களை இக்காலப் புலவர்கள் இயற்றினர்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்கள் காலப்பகுதியில் மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் மேலும் ஒரு சவாலை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் மதம் பரப்பும் நோக்குடன் வந்த மிஷன்களும் அவற்றின் மதப்பிரச்சார முயற்சிகளுமே மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குப் பெரும் சவாலாக அமைந்தன. தமது மதம் பரப்பும் முயற்சிகளுடன் கூடவே மிஷன்கள் புரிந்து வந்த கல்விப்பணி கவர்ச்சி மிகுந்ததாக இருந்தது. இதனால் சைவ மாணவர்களின் கவனமும் அக்கல்விமுறை நோக்கிச் சாயத் தொடங்கியது. இச்சூழலில் சைவத் தமிழ்க் கல்வி மரபு தன்னைச் சுயவிமர்சனத்துக்குட்படுத்த வேண்டிய தேவை எழுந்தது.

## மரபுவழியில் வளர்ந்த தமிழ்க் கல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னதாக தமிழ்க் கல்வியானது முற்றிலும் மரபு வழியிலேயே வழங்கப்பட்டு வந்ததைக் காணலாம். மரபுவழிக்கல்வி குருவுக்கு முதன்மை தந்தது. மாணவனின் கற்றல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் தீர்மானிக்கின்றவராகக் குரு

காணப்பட்டார். மாணவன் குருவை நாடிச் சென்று அவருடனுறைந்து கல்வியைப் பெறுவது இக்கல்வி முறையின் பொதுவான மரபாகும். பெரும்பாலும் குரு நெருங்கிய உறவினரின் பிள்ளைகள், நண்பர்களின் பிள்ளைகள், பழைய மாணாக்கரின் பிள்ளைகள் எனத் தனக்கு நன்றாகத் தெரிந்தோரின் பிள்ளைகளையே மாணாக்கர்களாகச் சேர்த்துக் கொள்வதுண்டு. மரபுவழிக் கல்வியில் பாடத்திட்டத்தைத் தீர்மானிப்பவரும் குருவே. தான் கற்றவற்றைக் கொண்டும், தனக்குக் கற்பிக்கப்பட்ட முறையியலை மாதிரியாகக் கொண்டும் குரு பாடத்திட்டத்தை உருவாக்குவார். பெரும்பாலும் அரிச்சுவடி, நீதிநூல்கள், நிகண்டுகள் என்பனவற்றை ஒழுங்குமுறையாகக் கற்பித்த பின்னர் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்பிப்பது பொதுவான வழக்காறாக இருந்தது. பல நூல்களை மேலெழுந்த வாரியாகக் கற்காமல் குறிப்பிட்ட ஒரு சில நூல்களை மட்டும் ஆழமாகக் கற்கும் முறை மரபுவழிக் கல்வியின் முக்கியமானதோர் அம்சமாகும். மரபுவழியாசிரியர் கற்பிக்கத் தெரிவு செய்யும் நூல்களில் அவருக்கு ஆழமான புலமையும் விருப்பும் காணப்படும்.

இக்கல்வி முறையில் நேரசூசி என்று எதுவும் இருந்ததில்லை. குரு தனக்கு ஓய்வான நேரங்களில் அல்லது தனக்கு கற்பிப்பதற்கு உசிதமானது எனக் கருதுகின்ற நேரங்களில் கற்பிப்பார். கற்பித்தல் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் எனத் தொடர்வதுமுண்டு. மரபுவழிக்கல்வியில் பரீட்சித்தல் என்பது மனனம் செய்து ஒப்புவித்தலையே குறிக்கும். மனனம் செய்து ஒப்பிக்கும் திறனே மாணவரின் திறமைக்கு அடையாளமாகச் சுட்டப்பட்டது. மரபுவழி அறிஞர்களின் மனனத்திறனையும் ஞாபகத் திறனையும் புடம் போட்ட ஓர் அம்சம் இவ்வாறான மனனப் பயிற்சியே. இக்கல்வி முறையில் குருவுக்கு வேதனம் என எதுவும் வழங்கப் படுவதில்லை. மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ பணமாகவோ பொருளாகவோ, தட்சணை கொடுப்பதுண்டு. இலக்கியங்கள் இலக்கணங்கள் தத்துவம், சமயம், சோதிடம், வடமொழி என சைவத் தமிழ்க் கல்விமுறைமைக்கு ஏற்ற அறிவையும் பயிற்சியையும் குரு மாணவர்களுக்கு வழங்குவார்.

இவையே மரபுவழிக் கல்வியின் முக்கியமான சில பண்புகளாகக் காணப்பட்டன. இப்பண்புகளில் நின்றும் முற்றிலும் வேறுபட்ட நிறுவன அடிப்படையிலான கல்விமுறைமையை மிஷனரிமார்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் பரவலாக அறிமுகம் செய்தனர்.

## மிஷன்களின் வருகையும் கல்விப்பணியும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் மிஷனரிமார்கள் பலர் ஈழத்துக்கு வருகைதந்து மதம் பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டமை யாவரும் அறிந்ததொன்றே. தமது மதம் பரப்பும் முயற்சிகளின் ஓரம்சமாக அவர்கள் பாடசாலைகளைக் கட்டியெழுப்பினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் அவர்களால் பாடசாலைகள் பல உருவாக்கப்பட்டன. மிஷனரிமார்கள் பாடசாலைகளை அமைத்து ஈழத்தவருக்கு வரன்முறையான கல்வியை வழங்குவதனூடாக அவர்களைச் சுதேச மத நம்பிக்கைகளில் இருந்தும் விடுவிக்க முடியும் என நம்பிய மிஷனரிமார்கள் இங்ஙனம் இந்து சமய நம்பிக்கையில் நின்றும் அவர்களை விடுவிப்பதனூடாக இலகுவாகக் கிறிஸ்தவத்தை அவர்கள் மத்தியில் பரப்ப முடியும் எனக் கருதினர்.

அதேநேரத்தில் ஆங்கிலேயரும் தமது நிர்வாக அலுவல்கள் விரிவாக்கப்பட்டதால் தேவையான நிர்வாகிகளைச் சுதேசிகளிடத்திலேயே உருவாக்கிக் கொள்வதற்காகக் கல்வி அறிவைச் சுதேசிகளுக்கு வழங்க வேண்டும் என விரும்பினர். இதன்பின்னணியில் மிஷனரிமார்களின் பாடசாலைகளை அமைத்தல், கல்விப் போதனைகளை வழங்குதல் போன்ற முயற்சிகளுக்கு அவர்களும் தமது அங்கீகாரத்தைத் தந்தனர்.

மிஷனரிமார்கள் எதிர்பார்த்தது போலவே ஈழத்தவருள் குறிப்பிட்ட சதவீதத்தினர் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளும் முகமாக மிஷனரிமாரின் பாடசாலைகளுக்குச் செல்வதில் ஆர்வங் காட்டினர்.

1. சமூகத்தில் நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவு சுதேசிகளுக்குத் தேவையானதாக இருந்தது.

2. அன்றியும் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவைப் பெற வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்பட்டது.

அக்காலத்தில் நிறுவனரீதியான கல்வியை வழங்குவனவாக அலகுகளாக மிஷனரிமார்களின் பாடசாலைகளே விளங்கின. மரபுரீதியான சைவத்தமிழ்க்

கல்வியைப் பெற்றோரும் மேலே குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பாடசாலைகளை அணுகினர்.

இந் நிலையில் சமகாலத்தில் வாழ்ந்த சைவத்தமிழ் அபிமானிகள் மரபுவழித் தமிழ்க் கல்விப்பாரம்பரியத்தில் முக்கியமான சில மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தனர். இம் மாற்றங்கள் பிரதானமாக இரண்டு வழிப்பட்டனவாக அமைந்தன.

1. முற்றிலும் மரபுவழிப்பட்டதாக தேவைப்படின் சிற்சில மாற்றங்களுடன் தமிழ்க் கல்வியினைத் தொடர்தல். அதற்கேற்ற வகையில் மரபுவழிக் கல்வியினை அதன் தனித்துவமும் பாரம்பரியச் சிறப்பும் குன்றாத வகையில் முன்னெடுப்பதற்கான நிறுவனங்களைக் கட்டமைத்தல்.

2. புதிய தேவைகள், எதிர்பார்ப்புகள், சமூகமாற்றங்கள் என்பவற்றுக்கு ஏற்றவகையில் மரபுவழிக் கல்விக்குள் நவீனத்துவத்தினை உள்வாங்குதல்.

## முற்றிலும் மரபுவழிப்பட்டதாகத் தமிழ்க் கல்வியினைத் தொடர்தல்

தமிழ்க் கல்வியினை தொன்றுதொட்டுப் பேணப்பட்டு வரும் முறைமைகளுக்கமைவாகப் போதிப்பதில் மரபுவழித் தமிழ் அறிஞர்கள் ஆர்வமுடையோராயிருந்துள்ளனர். அதற்கேற்ற வகையில் பாரம்பரியமான தமிழ்க் கல்வி அமைப்புக்களைப் பாதுகாத்தோ அல்லது அவற்றைப் புதுக்கியோ அல்லது புதிதாக நிறுவனங்களைக் கட்டமைத்தோ மரபுவழித் தமிழ்க் கல்வியினை அதன் சீரும் சிறப்பும் குலையா வகையில் அவர்கள் பாதுகாத்து வந்துள்ளதைக் காணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய தமிழ்க் கல்வி அமைப்புக்கள் என்றவகையில் முக்கியமானவையாகத் திகழ்ந்தவை

i. திண்ணைப்பாடசாலைகள்
ii. இராப்பள்ளி, நிலாப்பள்ளி

iii. மரபுவழியறிஞர்களின் வீடுகளில் தனிப்பட்ட முறையில் நிகழ்த்தப்பட்டு வந்த வகுப்புக்கள் என்பனவாகும்.

## திண்ணைப்பள்ளிகள்

திண்ணைப்பாடசாலைகள் மரபுவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் முதுகெலும்புகளாகப் பல ஆண்டுகளாக இயங்கிவந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிறுவன ரீதியான பாடசாலைகள் உருவாவதற்கு முன்னதாகத் தமிழ்க் கல்வியினை முன்னெடுத்தவை இவையே. திண்ணைப் பாடசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தன என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. இரண்டு மூன்று கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் விளங்கியதுண்டு. பெரும்பாலும் ஆரம்பக் கல்வியைக் குடும்பச் சூழலில் பெற்ற மாணாக்கர் நடந்து சென்று பாடங்களைக் கேட்கக்கூடிய தூரத்திலேயே திண்ணைப்பள்ளிகள் நிலவின' (சிவலிங்கராஜா. எஸ், 2000, 15). திண்ணைப் பாடசாலைகளாகப் பெரும்பாலும் ஆசிரியர்களின் வீடுகளோ அல்லது ஊரிலுள்ள பெரிய மனிதர்களின் வீடுகளோ விளங்கின. வீட்டின் தலைவாசலில் அல்லது கூடத்தில் வகுப்புக்கள் நடைபெறுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை கற்பித்த திண்ணைப்பாடசாலை பற்றிய கீழ்வரும் விபரணம் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

> "(வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு) எதிரே தெற்கு நோக்கி இருந்தது சிவன் கோவில் குருக்களும் சிறந்த வடமொழி அறிஞருமாகிய மறைத்திரு பிச்சுவையரவர்களின் இல்லம். இவ்வீட்டுத் திண்ணை விசாலமானது. இத் திண்ணையிலே வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை சில மாணவருக்குப் பாடஞ் சொல்லி வந்தார்".
>
> *(நடராஜன். க.கி, 1960, 5)*

நன்கு மெழுகிக் காய்ந்த திண்ணையின் ஒருபகுதியில் பெரும்பாலும் வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் மான் தோல் அல்லது பலகையில் அல்லது பாயில் ஆசிரியர் அமர்ந்திருப்பார். மாணவர்கள் பெரும்பாலும் திண்ணையில் அமர்ந்து பாடங்கேட்பர். 1820 ஆம் ஆண்டு தொடக்கம் 1836

ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்திற் பணியாற்றிய மைரன் உவின்சிலோ என்னும் அமெரிக்க மிஷனரியின் கடிதத்தில் தரப்படும் இத்தகைய திண்ணைப்பள்ளிகள் பற்றிய விபரணம் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

"இப்பள்ளிகளில் மேல்நிலைச் சாதியாரின் பிள்ளைகள் படித்தனர். இவை பெரும்பாலும் ஒரு மரத்தினடியில் அல்லது ஒரு வீட்டின் திண்ணையில் நடைபெற்று வந்தன. மாணவர்கள் சப்பாணிகட்டி உட்கார்ந்து தமக்கு முன்னாற் பரப்பப்பட்டிருந்த புழுதி மணலில் எழுதக் கற்றுக் கொள்வார்கள். ஏட்டுச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களை அடையாளங் காணும்வரை இத்தகைய படிப்பு நடந்துகொண்டேயிருக்கும். ஏட்டுச் சுவடிகளில் எழுத்துக்கள் இரும்பாணியினால் எழுதப்படும். எழுத்துக் கூட்டலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. ஏனெனில் ஒவ்வொரு எழுத்தும் தனக்கேயுரிய ஒலியைக் கொண்டு விளங்குகின்றது. சொல்லில் ஓரெழுத்தாவது ஒலியில்லாமல் இல்லை. இதனைத் தொடர்ந்து தொடக்க நூல்களையும் நிகண்டுகளையும் மனப்பாடஞ் செய்து கொள்கின்றனர். அதற்குப் பின்னர் பாடத்தை வகுத்துப் பொருள்காண முயல்கின்றனர். ஏட்டுச்சுவடிகளிலே சொற்கள் இடைவெளியின்றியே எழுதப்பட்டிருக்கும். இச்சொற்களுக்கு அவர்கள் பொருள்காண முயற்சிப்பர்"

*(ஜெபநேசன்.எஸ். 2009. 19)*

திண்ணைப்பள்ளிகளிலே மாணவர்களின் தொகைக்கு ஏற்ப வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை. மாணவர்களின் அறிவுத்தரம் (திறமைக்கேற்பவே) வகுப்புக்கள் பிரிக்கப்படும். உயர்ந்த (மேல்) வகுப்பிற் கற்கும் மாணாக்கர் கீழே வகுப்புகளுக்கு ஆசிரியராக அமைவதும் உண்டு. இவர்களை மாணாக்க உபாத்தியாயர் என்றும் சட்டாம்பிள்ளை என்றும் அழைக்கும் வழக்கம் இருந்தது. திண்ணைப்பள்ளி மரபிலே பொரும்பாலான மாணவர்கள் - உயர்தரக் கல்வியைப் பெறுபவர்கள் ஆசிரியருடன் உடனுறைந்து படிப்பதும் உண்டு. மாணவனின் அறிவு, ஒழுக்கம், தோற்றம், பணிவு முதலிய அம்சங்களை மனங்கொண்டே திண்ணைப்பள்ளி ஆசிரியர் மாணவர்களுக்கு அனுமதி கொடுப்பார். நீதி போதனையை அறிந்து, படித்து நல்ல வாழ்க்கையை வாழவேண்டும் என்பதே மரபுவழித் தமிழ்க் கல்வியின் பிரதான நோக்கமாக இருந்தது. தமிழ் இலக்கிய, இலக்கணங்களேயன்றி சோதிடம், வைத்தியம்,

புராணபடனம் முதலானவையும் திண்ணைப்பாடசாலைகளிலேயே கற்பிக்கப்பட்டு வந்துள்ளன.

## இராப்பள்ளி

திண்ணைப் பாடசாலைகளுடன் இணைந்த நிலையில் இராப்பள்ளி – நிலாப்பள்ளி- என்பன நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் இலக்கிய, இலக்கண நாட்டங்கொண்ட வயது வந்தோர் இப்பள்ளிகளில் இணைந்து தமது அறிவினை விருத்தி செய்து கொண்டனர். தொழில்துறைகளுக்குச் சென்று விட்டு ஓய்வாக இருக்கும் இரவு நேரங்களில் இப்பாடசாலைகள் நிகழ்த்தப் பட்டமையினால் வளர்ந்தோர் இதில் இணைந்து கல்வி கற்பது இலகுவானதாக அமைந்தது. பகற்பொழுதில் பிற தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பண்டிதர்களும் இராக்காலங்களில் மாணவர்களை அழைத்துக் கல்விபுகட்டி வந்தனர் என அறியமுடிகின்றது. பெரும்பாலும் புராணபடனங்கள் வாய்மொழிக் கல்வி என்பனவே இராப்பள்ளிகளில் பிரதான இடத்தினைப் பெற்றன. இரவில் நிலவிலிருந்து கல்வி கற்றலும் புகட்டலும் நிகழ்ந்ததனாலேயே இத்தகைய இராப்பள்ளிகள் நிலாப்பள்ளிகள் என வழங்கப்பட்டன. பிற்காலங்களில் 'பெற்றோல் மார்க்ஸ்' நிலவின் இடத்தினைப் பிடித்துக் கொண்டது.

## பண்டிதர்கள் வித்துவான்களின் வீடுகள்

மரபுவழித் தமிழ்க் கல்வியை வளர்த்த மற்றுமோர் அலகாக விளங்கியவை பண்டிதர்களின் வீடுகளாகும். பல பண்டிதர்களின் தங்கள் வீடுகளை நாடி வரும் அறிவு வேட்கை கொண்ட மாணவர்களுக்குத் தம் வீடுகளிலேயே வைத்து வகுப்புக்கள் நடாத்தி வந்துள்ளனர். தமது வீட்டின் ஒரு பகுதியையோ அல்லது தனியாக அமைக்கப்பட்ட கொட்டில்களையோ இத்தகைய தேவைகளுக்காக அவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். மரபுவழித் தமிழ் அறிஞர்கள் பலரின் வரலாறுகளைக் கற்கின்றபோது அவர்கள் அக்காலத்தில் பிரபலமாக இருந்த தமிழ் அறிஞர்களின் வீடுகளுக்குச் சென்று கற்று வந்துள்ளமை புலனாகும். மிகத் தூரத்தில் இருந்து பண்டிதர்களின் வீடுகளுக்கு வரும் மாணவர்கள் அவருடன் உடனுறைந்து கற்றமைக்குச் சான்றுகள் உள்ளன. ஆசிரியருக்கு உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது மாணவர்கள்

கற்று வந்துள்ளனர். மரபுவழிக்கல்விப் பாரம்பரியத்தில் மாணவர்கள் ஆசிரியருக்கு மிகவும் வேண்டப்பட்டவரின் பிள்ளைகளாக இருந்ததால் இத்தகைய கற்பித்தல் சாத்தியமானதாக அமைந்தது. தெல்லிப்பழை, ஏழாலை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், வட்டுக்கோட்டை, புலோலி, இருபாலை, நல்லூர், உடுப்பிட்டி, மட்டுவில் முதலான இடங்களில் வாழ்ந்த பண்டிதர்களிடம் மாணவர்கள் விரும்பிச் சென்று வீடுகளில் தங்கிக் கற்றமைக்குச் சான்றுகள் உள்ளன. சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| *ஆசிரியர்* | *வாழ்ந்த இடம்* | *கற்ற மாணவர்கள்* |
|---|---|---|
| சரவணமுத்துப் புலவர் | நல்லூர் | சிவசம்புப் புலவர் |
| சிவசம்புப் புலவர் | உடுப்பிட்டி | வ. குமாரசாமிப்புலவர்<br>வேன் மயில்வாகனப் புலவர்<br>வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை |
| கார்த்திகேயப் புலவர் | நல்லூர் | ம. க. வேற்பிள்ளை |
| பொன்னம்பலப்பிள்ளை | நல்லூர் | சபாபதி நாவலர் |
| முருகேச பண்டிதர் | சுன்னாகம் | குமாரசாமிப் புலவர் |
| கதிர்காமையர் | புன்னாலைக் கட்டுவன் | கல்லடி ஆ. வேலுப்பிள்ளை |
| சம்பந்தப்புலவர் | நல்லூர் | செந்திநாதையர் |

## சைவத்தமிழ்ப் பாடசாலைகள்

காலப்போக்கில் சைவத்தமிழ் பற்றுக்கொண்ட மரபுவழியறிஞர்கள் மாணவர்களின் நலன்கருதி சிறு சிறு பாடசாலைகளை அமைத் திருந்தமையையும் அறியமுடிகின்றது. மிஷனரிமாரின் பாடசாலைகள் அவர்களது இத்தகைய முயற்சிகளுக்கு முன்மாதிரியாக அமைந்திருந்தன போலத் தெரிகின்றது. ஆனால் பாடசாலைக்குரிய அதாவது நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பொன்றுக்குரிய கற்றல் கற்பித்தல் முறைமைகளை உள்வாங்காது மரபுவழிக்கல்வியையே அவை வழங்கி வந்துள்ளன. இவற்றுள் சில ஆறுமுகநாவலர் சைவத்தமிழ் பாடசாலைகளை ஆரம்பித்து வழிகாட்டு வதற்கு முன்னதாகவே அமைக்கப்பட்டு விட்டமை நோக்கத்தக்கதாகும். 1842

இல் நல்லூரில் நல்லூர் கந்தசுவாமிக் குருக்களால் அமைக்கப்பட்டதான அவ்வாறான ஒரு பாடசாலை குறித்து பேராசிரியர் வ. ஆறுமுகம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சைவக்கல்வி மறுமலர்ச்சியின் முதல் வெளிப்பாடு என்று கொள்ளக்கூடிய முதற் பள்ளிக்கூடம் 1842 இல் நல்லூரில் ஆரம்பிக்கப்படது. அதன் காரணகர்த்தாவாக இருந்தவர் நல்லூர் கந்தசுவாமி கோயில் குருக்கள் என்று குறிப்பிடப்படினும் அதற்கு உந்து சக்தியாக இருந்தது அவ்விடத்துச் சமூக மேல்மட்டமே"

*(ஆறுமுகம்.வ, 1995, 04)*

என்கிறார். அதேபோல அருளம்பல முதலியார் என்பவர் நாவலருக்கு முன்பே உடுப்பிட்டியில் ஸ்தாபித்த பாடசாலை பற்றியும் அறிய முடிகின்றது. இதுபற்றி பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"நாவலர் பாடசாலை நிறுவுவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்திற் சைவப் பாடசாலைகள் நிறுவும் பணி தொடங்கிவிட்டது. திண்ணைப் பள்ளிக்கூடமாக இயங்கியதைத் தருமப் பள்ளிக்கூடமாக மாற்றியமைக்கும் மரபு ஒன்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வடமராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டியிலே இத்தகையதொரு பாடசாலை பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இயங்கியமைக்கான தகவல்கள் உண்டு. உடுப்பிட்டியைச் சேர்ந்த அருளம்பல முதலியார் என்பவர் தருமப்பள்ளிக்கூடம் என்ற பெயரிலே இப்பாடசாலையை நிறுவியிருந்தார் இப்பாடசாலையில் பரீட்சை நடைபெற்றமைக்கான சான்றுகள் பல உதயதாரகைப் பத்திரிகை மூலம் கிடைக்கின்றன."

*(சிவலிங்கராஜா. எஸ். 2000, 47)*

இவையேயன்றி ஆறுமுகநாவலரின் வழியினைப் பின்பற்றி ஊர் தோறும் அமைந்த சைவத்தமிழ்ப் பாடசாலைகளும் மரபுவழித் தமிழ்க் கல்வியை வளர்ப்பதில் ஆர்வங்காட்டின.

i. இதுவரைகாலமும் திண்ணைப் பாடசாலைகளாக மரபுவழிப் புலமையாளர்களால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பல நிறுவனரீதியான பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டன.

ii. சைவ மத உணர்வும், பொதுநல மனப்பாங்கும் கொண்ட செல்வந்தர்கள் தத்தம் ஊர்களிலே பாடசாலைகளைக் கட்டினர்.

iii. ஆங்கிலேய அரசாங்க காலத்தில் உயர்பதவிகளைப் பெற்றிருந்த மதப்பற்றும் தாய்மொழிப் பற்றும் கொண்ட பெரியோர்கள் சிறிய அளவிலே ஊர்கள் தோறும் பாடசாலைகளை அமைத்து வந்தனர்.

iv. ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி கண்ட உள்ளூர்ப் பிரபுத்துவமும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது.

இங்ஙனமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலுமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலபகுதிகளிலும் பாடசாலைகள் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. இப்பாடசாலை களின் கட்டமைப்பு, கற்றல் கற்பித்தல் முறைகள் பற்றி அறியப் போதுமான தகவல்கள் இன்று கிடைக்கவில்லை. என்றாலும் ஏறத்தாழ நாவலர் வண்ணார் பண்ணைப் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பரீட்சித்துப்பார்த்த சைவத் தமிழ்க் கல்வி மரபினை இவை பின்பற்றிவந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். இவற்றுள் சில பாரம்பரிய மரபுவழிக் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கே அதிக முக்கியத்துவம் தந்து வந்துள்ளமை புலவர்களின் வரலாறுகளினூடாக அறியக் கிடைக்கின்றது. குமாரசாமிப் புலவரின் வரலாற்றினை எழுதிய அவரது மகன் கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை சுன்னாகம் மயிலணியில் காணப்பட்ட இவ்வாறானதொரு பாடசாலைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மயிலணி என்னும் இடம் ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத் தொடக்கத்திற் சைவமும் தமிழும் மறுமலர்ச்சியடைந்த இடங்களுள் முக்கியம் வாய்ந்தது. அங்கு வாழ்ந்த சைவ வேளாண் பிரபுக்கள் அவ்விடத்தில் ஒரு முருகமூர்த்தி கோயிலையும் ஒரு சைவக் குருக்கள் மடத்தையும் ஒருபாடசாலையையும் ஸ்தாபித்து அவைமூலம் சைவத்தையும் தமிழையும் மறுமலர்ச்சியடையச் செய்தனர்.....

பாடசாலையில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வல்ல ஆசிரியர்களுள் சிறந்தவர்கள் சுவாமிநாத தேசிகர், நமச்சிவாய தேசிகர், முத்துக்குமார கவிராயர், முருகேசு பண்டிதர், சங்கர பண்டிதர் முதலியோர். பாடசாலையில் கற்றுத் தேறியவருட் சிறந்தவர்கள் சி.வை.தாமோதரம் பிள்ளை, மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஊரெழு சு சரவணமுத்துப்புலவர், குமாரசாமிப்புலவர், கீரிமலை கா. சபாபதிக் குருக்கள் முதலியோர். மயிலணி அக்காலத்தில் ஒரு சிறந்த கலைக்கூடமாக விளங்கிற்று"

*(முத்துக்குமாரசாமிப்பிள்ளை. கு. 1970, 05)*

மேற்கூறிய விபரிப்பினை உற்று நோக்குகின்ற போது அப்பாடசாலைகளில் மரபுவழிக்கல்வி நன்முறையில் பேணப்பட்டு வந்திருத்தலைக் காணலாம். மரபுவழித் தமிழ் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து மரபுவழிக்கல்வியைக் காக்க அல்லது பேண முறப்பட்ட முயற்சிகளில் முதன்மையானவை இத்தகைய பாடசாலைகளே எனில் தவறில்லை.

## ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலை

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட நிறுவனரீதியான அமைப்புக்களில் ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையம் ஒன்று. சி.வை.தாமோதரம்பிள்ளை 1876 ஆம் ஆண்டளவில் இப்பாடசாலையை நிறுவினார். முதல் ஒருவருடம் முருகேசு பண்டிதரும் பின்னர் குமாரசாமிப்புலவரும் இப்பாடசாலையின் தலைமையாசிரியர்களாகப் பொறுப்பேற்று அப்பாடசாலையைத் திறம்பட நடாத்தி வந்துள்ளனர். 1898 ஆம் ஆண்டு தவிர்க்க முடியாத காரணங்களினால் இப்பாடசாலை மூடப்படும் வரை யாழ்ப்பாணத்து மரபுவழிக்கல்விக்கு இப்பாடசாலை ஆற்றிய பங்களிப்பு விதந்து கூறப்பட வேண்டியதொன்றாகும். இப்பாடசாலையின் பரீட்சைகள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெயர்பெற்று விளங்கிய பண்டிதர்களால் நிகழ்த்தப்பட்டன. ஆறுமுகநாவலர், முருகேசுபண்டிதர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நல்லூர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை முதலானோர் பரீட்சகர்களாகக் கலந்து கொண்டமைக்குச் சான்றுகள் உள்ளன. பரீட்சகர்கள் தாங்கள் நடாத்திய பரீட்சைகளின் முடிவுகளை அறிக்கைகள் மூலம் முகாமைக்காரருக்கு அனுப்பி வைத்ததோடமையாது இலங்கை நேசன் முதலான பத்திரிகைகளிலும்

வெளியிட்டனர். 1891 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினைந்தாம் திகதி இப்பாடசாலையின் பரீட்சையை நடாத்திய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை தான் நடாத்திய பரீட்சை சம்பந்தமாகத் தந்திருக்கும் பின்வரும் அறிக்கை அப்பாடசாலையின் கற்றல், கற்பித்தல் தொடர்பான பல விடயங்களையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்குகின்றது.

> "ஸ்ரீமான் சி.வை தாமோதரம்பிள்ளையவர்களால் ஏழாலை என்னும் ஊரிலே தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கற்கும் மாணவர்கள் இம்மாதம் 15 ஆம் தேதி எம்மாற் பரீட்சிக்கப்பட்டார்கள். மேல்வகுப்பு மாணவர்கள் படிக்கும் பாடங்களாவன: தொல்காப்பியம், நன்னூல், திருவள்ளுவர் திருக்குறள், முல்லையந்தாதி, கம்பரந்தாதி, தணிகைப்புராணம், இரகுவம்சம் என்னும் இவைகளாம். இவைகளுள் எவ்வெப் பகுதிகளிலும் வினவிய வினாக்களுக் கெல்லாம் மாணாக்கர்கள் தக்கவிடையளித்தார்கள். இத்துணைச் சாமர்த்தியராக அதிபிரயாசத்தோடு கற்பித்த உபாத்தியாயர் ஸ்ரீ குமாரசாமிப் புலவருடைய வித்தகம் எவராலும் வியக்கற்பாலது
>
> *(முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. 1970, 20)*"

இப்பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடநூல்களாக வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை குறிப்பிடுவனவெல்லாம் மரபுவழித் தமிழ் இலக்கியங்களே என்பதும் பன்னெடுங்காலமாக மரபுவழிக்கல்வியில் அவை படிப்பித்தும் பாராயணம் செய்யப்பட்டும் வந்தன என்பதும் குறிப்பிடற்பாலன. இப்பாடசாலையில் படித்துப் பல பண்டிதர்களும் தமிழ்ப் புலமையாளர்களும் வெளியேறியுள்ளனர். சுமார் நூறு மாணவர்கள் ஆரம்பத்தில் இப்பாடசாலையில் இணைந்து கல்விகற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுள் பலர் பின்வந்த காலங்களில் மரபுத்தமிழ்க்கல்வி வளர்ச்சிக்காற்றிய பணிகள் அளப்பரியன. வித்துவான் சிவானந்த ஐயர், தெல்லிப்பழை இ. பாலசுப்பிரமணிய ஐயர், தெல்லிப்பழை வ. சுப்பிரமணியபிள்ளை, இளவாலை க. சங்கரப்பிள்ளை, தெல்லிப்பழை நா. மயில்வாகனம்பிள்ளை, மாவிட்டபுரம் ச விசுவநாத முதலியார், தையிட்டி பொன்னையர், சுன்னாகம் மாணிக்கத் தியாகராச பண்டிதர், ஏழாலை வி. தம்பையாபிள்ளை, கொக்குவில் இளையதம்பிப்பிள்ளை முதலியோர் அத்தகைய தமிழறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஏழாலையில் 'துவிபாஷா பாடசாலை' என ஒன்று இயங்கியதாகவும் அறியமுடிகின்றது. வடமொழி, மற்றும் தமிழ் மொழியறிவினை மரபு பிறழாது வழங்கும் பாடசாலையாக அது இயங்கியுள்ளது. ஏழாலை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் முதலான அயற்கிராம மாணவர்கள் அதில் கல்விகற்றுள்ளனர். அப்பாடசாலை பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெற்றில.

## பிரசீன பாடசாலை

ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அடுத்தபடியாக மரபுவழித் தமிழ்க் கல்விக்கு மிகப்பெருந்தொண்டாற்றிய நிறுவனம் சுன்னாகம் பிரசீன பாடசாலையாகும். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகரான முகாந்தரம் தி. சதாசிவ ஐயர் அவர்களே இதனையும் ஆரம்பித்தார். 'பிரசீனம்' என்பதற்குப் பழமை என்று பொருள். பழமை பொருந்திய மரபுச் செழுமைமிக்க தமிழ் மற்றும் வடமொழிகளைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாகவே அது இயங்கியது. ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கம் நடாத்தும் பண்டிதர் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்குடனேயே இப்பாடசாலை உருவாக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பாடசாலையை முழுமையாகப் பொறுப்பேற்று நடாத்தியவர் வித்துவசிரோமணி கணேசையரவர்கள். 1921 ஆம் ஆண்டில் இப்பாடசாலையின் தலைமைப் பேராசிரியராக அமர்ந்த ஐயரவர்கள் ஏறக்குறைய பதினொரு ஆண்டுகள் அதாவது 1932 வரை இங்கு பணியாற்றியுள்ளார். குடாநாட்டின் பிறபாகங்களில் பண்டிதர் பரீட்சைகளுக்கு மாணவரைத் தயார்படுத்தும் வகுப்புக்கள் நடைபெற்று வந்துள்ளன என அறிந்த போதும் சுன்னாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிரசீன பாடசாலை போன்று அவை இயங்கினவா என்பதை அறிய முடியவில்லை. சாவகச்சேரியில் பிரசீன பாடசாலை ஒன்று இயங்கியமை பற்றி அறியமுடிந்தாலும் அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

## காவிய பாடசாலை

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பாதுகாக்க முயன்ற நிறுவனங்கள் வரிசையில் அடுத்து நோக்கத்தக்கது காவிய பாடசாலையாகும். வண்ணார் பண்ணையிலே நாவலர் உருவாக்கிய சைவத்தமிழ்ப் பாடசாலையின் ஓர் அங்கமாகக் காவிய பாடசாலை விளங்கிற்று. பிரசீன பாடசாலைகளைப்

போன்று பண்டித பரீட்சைகள், வித்துவான் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்குடனேயே இது இயங்கியது. வண்ணார் பண்ணைக் காவியபாடசாலையிலேயே - பிற்காலங்களில் தலை சிறந்த தமிழ்ப்புலமை யாளர்களாக விளங்கிய - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோர் கல்விகற்றுள்ளனர். குமாரசாமிப்புலவர் நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நின்றும் ஓய்வுபெற்ற பின்னதாக தம்மை நாடிவந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு காவியபாடசாலை ஒன்றினைத் தனது வீட்டில் நடாத்தி வந்ததாகத் தெரிகின்றது. அதேபோல மட்டுவில் உரையாசிரியர் ம.க வேற்பிள்ளை தனது ஊரில் பணவசதி படைத்தோரின் உதவியுடன் காவியபாடசாலை ஒன்றினை உருவாக்கினார் எனவும் அறியமுடிகின்றது. இது பற்றிப் பண்டிதர் சி. அப்புத்துரை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"உரையாசிரியர் (ம. க. வேற்பிள்ளை) மட்டுவிலில் இருந்த வேளை ஒரு பாடசாலையைத் தாபிக்க வேண்டும் என விரும்பினார். அக்காலத்திலிருந்த ஆயக்காரரின் சகோதரர் காசிநாதர் ஒரு நைட்டிகப் பிரமச்சாரி. உரையாசிரியரின் கல்வி ஆற்றலை விளங்கிக் கொண்ட காசிநாதர நிலங்கொடுத்து ஒரு சிறிய பாடசாலையை உரையாசிரியரின் அநுசரனையுடன் உருவமைத்துக் கல்வி கற்பிக்க வைத்தார்கள். காலப்போக்கில் காவிய பாடசாலையாகி சந்திர மௌலீஸ்வரர் வித்தியாலயம் என்ற பெயருடன் இன்று விளங்குகின்றது."

திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையிலும் 1930 ஆம் ஆண்டளவில் இந்துபோட் இராசரத்தினம் காவியபாடசாலை ஒன்றினை ஆரம்பித்து வைத்தமையுங் குறிப்பிடத்தக்கது.

"இதற்கென முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஒரு விசாலமான மண்டபத்தைக் கட்டினர். ஒரே நேரத்தில் 300 பிள்ளைகள் இருந்து படிக்கக் கூடியதாக இம் மண்டபம் இருந்தது. இத்துடன் இணைந்தாற் போல் இரு அறைகளும் விரிவுரையாளருக்குக் கட்டப்பட்டது. இதன் விரிவுரை யாளராகவும் பொறுப்பாளராகவும் பண்டிதணி சி. கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டார்கள். வருகை விரிவுரையாளர்களாக பண்டிதர்கள் செ

துரைசிங்கம், சி.கா.தம்பையா, சு. இராசையா ஆகியோர் கடமையாற்றினர். இவ்வகுப்புக்கள் இரவுபகலாக இலவசமாக நடாத்தப்பட்டன"

என்கிறார் க. பேரம்பலம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிறபகுதிகளிலும் இவ்வாறான பல காவியபாடசாலைகள் உருவாகியிருக்க வாய்ப்புள்ளதாயினும் அவற்றைப் பற்றிய தகவல்கள் இன்று கிடைக்கப் பெறவில்லை. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இக்காலப்பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த சித்தாந்த வகுப்புக்களும் மரபுவழித் தமிழ்க் கல்வியைக் கட்டிக்காப்பதில் பெரும்பங்காற்றியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பேணவும் மரபுவழியறிஞர்களைக் கௌரவப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட மற்றுமோர் அமைப்பு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமாகும். நாவலர் பெருமான் காலத்தில் ஒருமுறையும் அதற்குப் பின்னர் இன்னொரு முறையும் யாழ்ப்பாணத்தில் 'தமிழ்ச் சங்கம்' ஒன்று நிறுவப்பட்டதாக அறிகின்றோம். இவற்றுள் நாவலர் காலத்தில் உருவாகிய தமிழ்ச் சங்கம் பற்றி அறிய வாய்ப்புக்கள் எதுவுமில்லை. எனினும், 1898 இல் உருவாகிய தமிழ்ச் சங்கம் பற்றிய ஒரு சில செய்திகள் தெரியவருகின்றன. த. கைலாயபிள்ளை, குமாரசாமிப்புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை முதலானோர் இச்சங்கத்தின் தோற்றத்தில் பங்களிப்புச் செய்துள்ளனர். திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் பண்டிதர் டி. சவரிராயபிள்ளை குமாரசாமிப்புலவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்குத் தாங்கள் ஓர் சிரபூஷணம் போல் இருக்கின்றீரகள்" எனக் குறிப்பிட்டிருத்தல் நோக்கற்பாலதாகும்.

மதுரையில் செந்தமிழ்ச் சங்கம் 1901 இல் உருவாக்கப்பட்ட போது அதன் ஸ்தாபகரான பொ. பாண்டித்துரைத்தேவர் செந்தமிழ்ச்சங்க யாப்பினை உருவாக்குதற்கு வசதியாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க யாப்பினைத் தருவித்திருந்தார் என்ற செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குமாரசாமிப்புலவருக்கும் பாண்டித்துரைத் தேவருக்குமிருந்த இறுக்கமான நட்பும் பரஸ்பர மதிப்புணர்வும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க யாப்பு தமிழகத்துக்குத் தருவிக்கப்பட வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கலாம். தமிழகத்தில் மரபுவழித் தமிழ்க் கல்வியையும் அறிவையும் கட்டிக்காத்த மதுரை, கரந்தை, சேலம்

தமிழ்ச் சங்கங்கள், மடங்கள், ஆதீனங்கள், தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்றவற்றின் பணிகள் ஆராயப்பட வேண்டிய முக்கியத்துவம் பொருந்தியவை.

## ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கம்

மரபுவழியில் தமிழ் மற்றும் வடமொழிக் கல்வியினை முன்னெடுக்க முயன்ற நிறுவன அமைப்புக்களில் தலையானது ஆரியதிராவிடபாஷா பிவிருத்திச் சங்கமாகும். 1921 ஆம் ஆண்டு இது தோற்றுவிக்கப்பட்டது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த மரபுவழித் தமிழ்ப்புலமை யாளர்களின் பாரம்பரியத்தினைப் பேண வேண்டும் என்னும் அவாவின் வெளிப்பாடாகவே இச் சங்கம் உதயமாகியது. 'தொன்மை மறவேல்' என்னும் தாரக மந்திரத்துடன் 1922 ஆம் ஆண்டு முதல் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கியது. சங்கம் செற்படத் தொடங்கிய வேளையிலே சங்கத்தின் பணிகளை முன்னெடுத்துச் சென்றவராக அந்நாள் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த முகாந்தரம் தி. சதாசிவ ஐயர் விளங்கினார். இச் சங்கத்தில் அக்காலத்தில் வாழ்ந்த பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் பலரும் அங்கத்தவர்களாக இணைந்திருந்தனர். மரபுவழிக் கல்வியை வளர்ப்பதில் பல முயற்சிகளை இச் சங்கம் எடுத்தது. பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டிதப் பரீட்சைகளை நடாத்துதல், பணடிதப் பரீட்சைக்குரிய வகுப்புக்களை நடாத்துதல், மகாநாடுகள் கூட்டி அறிவுரைகள், சொற்பொழிவுகள் நிகழ்த்ததல், நூல்கள் வெளியிடுதல், நூலாசிரியர்களுக்கு உதவுதல், பத்திரிகை வெளியீடு, அறிஞர்களைக் கௌரவித்துப் பட்டங்களை வழங்கல் முதலானவற்றுக்கூடாக மரபு வழிக்கல்வியையும் மரபு வழி அறிஞர்களையும் பேண இச் சங்கம் அரும்பாடுபட்டது. 'மரபுவழிக் கல்விக்கென அமைக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனம் இது' என விதந்துரைக்கத் தக்க வகையில் இச் சங்கம் இயங்கி வந்துள்ளமை நோக்கற்பாலது. இச்சங்கத்தின் பணிகள் தனித்து ஆராயப்பட வேண்டியவை.

## மரபுவழித் தமிழ்க் கல்விக்குள் நவீனத்துவத்தினை உள் வாங்குதல்

மரபுவழித் தமிழ்க் கல்வியினை புதிய தேவைகள், எதிர்பார்ப்புக்கள், சவால்கள் என்பவற்றுக்கேற்ப மாற்றியமைத்து வழங்கச் சில முயற்சிகளும்

ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் பொருட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் நிலவத்தொடங்கிய நவீனத்துவப் போக்குகளுள் தேவையான வற்றினை மரபுவழிக் கல்வி மரபு உள்வாங்க முற்பட்டுள்ளது. இதுவும் ஒருவகையில் மரபினைத் தளர்வுறாமல் கட்டிக்காக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியென்றே கூறவேண்டும். அது பற்றியே இனி நோக்கப்படுகின்றது.

நவீனத்துவம் என்பதற்கு வழிவழியாக வழங்கிவரும் மரபிலிருந்து விடுபட்டு புதுமையை நாடுதல் அல்லது விரும்புதல் எனப் பொருள் தருவர். பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செல்வாக்கு பெற்றிருந்த இதன் தாக்கம் ஐரோப்பியர்கள் கீழைத்தேசங்களில் தமது காலனித்துவத்தை விரிவுபடுத்திய காலங்களில் அங்கும் பரவலடைந்தது. நவீனத்துவத்தின் செயன்முறைத்தாக்கம் இரண்டு நிலைகளில் கீழைத்தேசங்களில் உணரப்படலாயிற்று.

1. பழமையை முற்றாக மறுதலித்து நவீனத்தை முழுமையாக ஏற்க ஒரு சாரார் முனைந்தனர்.

2. பழமையைப் பாதுகாக்க புதுமையில் வேண்டியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் மனப்போக்கு கொண்டவர்களாக இன்னொரு சாரார் விளங்கினர். இது ஒருவகையில் பழமையைப் பாதுகாப்பதாக விளங்கியது.

இவற்றுள் இரண்டாவது நிலைப்பாட்டினைக் கொண்டவர்களாகவே ஈழத்தில் வாழ்ந்த மரபுவழித் தமிழார்வலர்கள் செயற்பட்டனர். மரபுவழிக்கல்வியின் தொடர்ச்சியினையும் வளர்ச்சியினையும் பேணிப் பாதுகாப்பதற்கு அக்கல்வி மரபில் மாற்றங்கள் அடிப்படையானவை என்பதை அவர்கள் உணரத் தலைப்பட்டனர். புதிய சவால்களுக்கும், புதிய சமூகத் தேவைக்கும் ஏற்ற வகையில் சைவத்தமிழ்க் கல்வியை மெருகுபடுத்த வேண்டியதன் பின்னணியிலே பல மாற்றங்களை அவர்கள் துணிவுடன் செயற்படுத்த விழைந்தனர். இம்மாற்றங்கள் பாடசாலை நிர்வாகம், பாடத்திட்டம், கற்பித்தல் அணுகுமுறை, பாடப்புத்தகங்கள் எனப் பல நிலைகளிலும் வெளிப்பட்டது. இம் மாற்றங்களுக்கெல்லாம் ஏற்ற முன்மாதிரியாக அமைதத்வர் என்ற அடிப்படையில் ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவராகவுள்ளார்.

## ஆறுமுகநாவலரும் சைவத்தமிழ்க் கல்வியும்

ஆறுமுகநாவலரின் ஆரம்பக் கல்வி மரபுவழிப்பட்டதாகவே இருந்தது. இருபாலை சேனாதிராச முதலியார், சரவணமுத்துப் புலவர் முதலான மரபுவழியறிஞர்களிடமிருந்து இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கொண்டார். தொடர்ந்து 1834 இல் ஆங்கிலக்கல்வியை அக்காலத்தில் உவெஸ்லியன் மிஷனரிமாரால் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் (Main Street) அமைக்கப்பட்டிருந்த பாடாசலையில் (Central School) கற்கத் தொடங்கினார். ஏழு வருடங்கள் அப்பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்த நாவலர் அங்கு பெற்றுக் கொண்ட கல்வி சார்ந்ததும், கல்விசாராததுமான அனுபவங்கள் பலவாகும். உவெஸ்லியன் மிஷன் பாடசாலை அதிபராக இருந்த பீற்றர் பேர்ஷிவல் அடிகளாரின் தொடர்பு அவரைப் பல நிலைகளிலும் உயர்த்தியது. புவியியல், வரலாறு, எண்கணிதம், மொழி எனப் பலதுறைகளிலும் பரந்த அறிவினை ஆறுமுகநாவலர் இங்கு தேடிக்கொண்டார். மரபுவழிக்கல்வி தந்த ஆழமான கல்வி அறிவும் பாடசாலையூடாகப் பெற்ற அகலமான கல்வியும் அவரைச் சிறந்த அறிவாளியாக, சிந்தனையாளராக, சமூகசேவகராக, படைப்பாளியாக, தீர்க்கதரிசனங் கொண்டவராக மாற்றியமைத்தன.

பீற்றர் பேர்ஷிவல் ஆறுமுகநாவலரின் திறமைகளை உணர்ந்து அவருக்கு அதே பாடசாலையில் கற்பிக்கவும் வாய்ப்பளித்தார். ஆரம்ப வகுப்புகளுக்கு ஆங்கிலத்தையும் மேல் வகுப்புகளுக்குத் தமிழையும் சில ஆண்டுகள் நாவலர் கற்பித்து வந்தார். அப்பாடசாலையில் கற்பித்த காலங்களில் கற்பித்தல் முறைமைகள், பாடவிதானங்களை ஒழுங்கமைத்தல், பாடசாலையின் நிர்வாகத்தை நடாத்துதல் முதலான பல விடயங்கள் சார்ந்த அனுபவ அறிவினை அவர் பெறக்கூடியதாக இருந்தது. இவ் அனுபவங்கள் பிற்காலங்களில் அவர் மரபுவழித் தமிழ்க் கல்வியினை நிறுவனமயப்படுத்தும் காலங்களில் மிகச் சிறந்த அனுகூலங்களாக அமைந்தன.

சைவ சமயம் வளரவேண்டுமானால், சைவத்தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள் பேணப்படவேண்டுமானால் சைவத் தமிழ்பாடசாலைகள் அவசியம் என அவர் வாதிட்டார். ஆறுமுகநாவலரின் சைவத்தமிழ்க் கல்விக்கு ஆதரவான கருத்துக்கள் வெறுங் கோஷங்களாக மட்டும் அமைந்துவிடாமல் செயலளவிலும் மாறின. இதன் விளைவாக வண்ணார் பண்ணையில்

அமைக்கப்பட்டிருந்த திண்ணைப்பாடசாலை சைவப்பிரகாச வித்தியா சாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. சைவத் தமிழ்ப்பாடசாலை எப்படியிருக்க வேண்டும், அங்கு எவ்விதமான நிர்வாகம் இருக்கவேண்டும், பாடதிட்டம் எவ்வாறு ஒழுங்கமைக்கப் படவேண்டும் என்பதை ஆறுமுகநாவலர் அப்பாடசாலையில் செய்துகாட்டினார்.

நாவலரின் முன்மாதிரியை அடியொற்றி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் கட்டியெழுப்பப்பட்டன. சைவசமயப் பற்றுணர்வு கொண்டோரால் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட இந்துசபை (Hindu Board) பல பாடசாலைகளை மிக விரைவாகக் குடாநாட்டின் பல பாகங்களிலும் அமைக்கலாயிற்று. இவற்றால் மரபுவழித் தமிழ்க் கல்வி யாழ்ப்பாணத்தில் மீண்டும் தளைத்துச் செழித்து வளரக் கூடியதாக அமைந்தது.

**சவால்கள்**

சைவத்தமிழ்ப் பாடசாலைகள் உருவாகியதுடன் அவற்றின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனெனில் இதுவரை காலமும் சைவத் தமிழ்க் கல்வி மரபுவழியாகவே வழங்கப்பட்டு அல்லது கையளிக்கப்பட்டு வந்தது. அக்கல்வி முறையை நிறுவனரீதியான பாடசாலைகள் உருவாக்கப்பட்ட சூழலில் தொடர்வதா அல்லது புதிய சைவத்தமிழ்க் கல்வித்திட்டத்தை முன்வைப்பதா என்பது அக்காலக் கல்வியியலாளர்கள் முன் எழுந்த முக்கியமான பிரச்சினையாகும்.

மரபுவழிக்கல்வியை அப்படியே நிறுவனரீதியான பாடசாலைகளில் புகுத்துதல் என்பது முடியாத காரியமாக இருந்தது. ஏனெனில் மரபுவழிக்கல்வியும் நிறுவனரீதியான கல்வியும் ஒற்றுமைப்பட்ட பண்புகளைக் கொண்டனவாக அமையவில்லை. இதனால் மரபுவழித் தமிழ்க கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்துதல் அல்லது புதியதொரு தமிழ்க் கல்வி மரபை வடிவமைத்தல் பற்றி சைவத்தமிழ் ஆர்வலர்கள் சிந்திக்கத் தொடங்கினர். இச்சிந்தனையின் வெளிப்பாடாகவே சைவத்தமிழ்க் கல்வியில் நவீனத் துவத்தைப் புகுத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் பற்றி, ஆறுமுகநாவலர் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் பேசினர்.

## ஆறுமுகநாவலரின் முதன்முயற்சிகள்

ஆறுமுகநாவலருக்கு மிஷனரிமார்களின் பாடசாலையில் கற்ற, கற்பித்த அனுபவங்கள் நிறுவனமயப்பட்ட கல்வி முறை பற்றிய பூரண அறிவைத் தந்திருந்தன. பாடசாலை நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தல், பாடப்புத்தகங்களை எழுதுதல், பாடத் திட்டங்களை ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் எனப் பலவற்றிற்கான முன்மாதிரிகளை அவர் அங்கிருந்து கற்றும், அறிந்தும் கொண்டார். ஆனால் மிஷனரிமார்களின் கல்விமரபை அப்படியே முழுமையாகத் தழுவி சைவத்தமிழ்க் கல்வி மரபை அவர் ஒழுங்குபடுத்த அல்லது நவீனமயப்படுத்த விழையவில்லை. மாறாக, சைவத்தமிழ்க் கல்வியின் நவீனமயமாக்கத்திற்கு எவை எவை தேவையோ அவற்றை மட்டுமே அறிமுகப்படுத்த அவர் முனைந்ததைத் காணலாம்.

பாரம்பரிய மரபுக்கல்வியின் பழமையும், சிறப்பும், பெருமையும், பிரயோசனமும் மாணவர்களுக்கு விளங்கத்தக்க வகையில் அதனைக் கவர்ச்சியுடையதாக்குவது அவரின் நோக்கமாக அமைந்தது. மிஷனரிமாரின் பாடசாலைகளை நாடும் மாணவர்களுக்கு சைவத்தமிழ்க் கல்வியும் சளைத்ததல்ல என்பதை அவர் காட்ட முனைந்தார். இந்நோக்கில் சைவத்தமிழ்க் கல்விமரபில் ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய மாற்றங்களிலே இரண்டு முக்கியமான பண்புகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

i. மரபுவழிக் கல்வியின் நோக்கினையும் இலக்கினையும் மாற்றியமைக்காத அல்லது குழப்பாத வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாணவர்களை அறிவுள்ளவர்களாக மாற்றுவதோடு மட்டும் அமையாது அவர்கள் சமயநம்பிக்கை, தமிழ்ப்பற்று, ஒழுக்கம் என்பவற்றோடு கூடியவர்களாக வளரவேண்டும் என்பது மரபுவழிக்கல்வியின் இலக்காக அமைந்தது. அதற்கேற்ற வகையிலேயே மரபுவழிக்கல்வியின் பாடத்திட்டங்கள், கற்பித்தல்முறை முதலானவை அமைந்திருந்தன. இந்த இலக்கினை ஆறுமுகநாவலர் மாற்றியமைக்கவில்லை. மாணவர்கள் கல்வியறிவுடன் கூடவே சமய அறிவும், தமிழறிவும் வாய்க்கப்பெற்றவர்களாக இருக்க வேண்டும் என அவர் வாதிட்டார்.

ii. மரபுவழிக்கல்வியின் கற்பித்தல் முறைமைகள், பாடத்திட்ட ஒழுங்கமைப்புகள் என்பன நவீனமயமாக்கத்திற்கு இடர்பாடாக இருந்தன. புதிய தேவைகளுக்கும் சவால்களுக்கும் அவை இயைந்து போகக் கூடியனவாக இருக்கவில்லை. மிஷனரிமாரின் கவர்ச்சிமிக்க போதனைகளுடன் ஒப்பிடும்போது மரபுவழிக் கல்விப் போதனைகள் சமகாலத்தில் பின்தங்கியே இருந்தன. இதனால் மரபுவழிக்கல்விப் போதனைகளை புதிய தேவைகளுக்கும் சவால்களுக்கும் ஏற்றவகையில் மாற்றியமைக்க வேண்டும் என எண்ணியதோடு மட்டுமல்லாது அதனைச் செயற்படுத்தியும் காட்டினார்.

இதுவரைகாலமும் நிறுவன வரையறைக்குள் வராத சைவத்தமிழ்க் கல்விமரபை நவீனமயப்படுத்துவது என்பது சவால் மிகுந்த பாரிய பணியாகவே இருந்தது. பாடசாலைகளைக் கட்டியெழுப்புதல் ஒருபுறமிருக்க ஆசிரியர்களை நியமித்தல், புதிய கல்விமுறைக்கு ஏற்ப அவர்களைப் பயிற்றுவித்தல், வேதனங்களை வழங்குதல் என்பன கடினமான காரியங்களாகவே இருந்தன. எனினும் சைவத்தமிழ்க் கல்விமரபை அழியாது பேண வேண்டும், மிஷனரிமார்களுக்குச் சவாலாக அதனை மேனிலைப்படுத்த வேண்டும் என்ற ஆர்வ உணர்வு அப்பணியில் ஈடுபட்ட ஆறுமுகநாவலர் முதலானோருக்கு மனோதைரியத்தை வழங்கியது.

பிடியரிசி சேகரித்தும் பாடசாலைகளை நடத்த முடியும் என்ற உறுதிப்பாட்டை ஆறுமுகநாவலர் வளர்த்தார். வேதனங்களைப் பல ஆண்டுகள் பெறாமலே சில ஆசிரியர்கள் சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் தமது சேவைகளை வழங்கியிருந்தனர். மிஷனரிமாரின் பாடசாலையில் வழங்கப்படும் ஆசிரிய வேதனத்திலும் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டும் சைவத் தமிழ்ப்பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் பலராவர். இங்ஙனம் சேவைநோக்குடன் செயற்பட்டோருக்குச் சைவத்தமிழ்க் கல்வியை மீண்டும் புத்துயிர்ப்புச் செய்வதே பெருவிருப்பாக அமைந்தது. இவ்வுணர்வொன்றே அவர்களை சேவை நோக்குடன் தம்மை அர்ப்பணிக்கக் காரணமாகவும் அமைந்தது.

மரபுவழித் தமிழ்க கல்வியின் நவீனமயமாக்கத்தில் பாடத்திட்டத்தினை வரையறுப்பதும் மிக முக்கியமான தேவையாக இருந்தது. இதுவரை காலமும்

மரபுவழியாக வழங்கப்பட்டு வந்த சைவத் தமிழ்க்கல்விப் பாடத்திட்டம் நிறுவனரீதியாக கல்வி மரபு மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் கவர்ச்சிகரமானதாக அமையவில்லை. மாறாக மாணவர்களுக்கு ஒரு சுமையாகவே விளங்கியது. அல்லாமலும், மிஷனரிமார்களால் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வந்த பரந்த, பலதுறைகளையும் உள்ளடக்கிய கல்விமரபுக்கு ஈடுகொடுக்கவும் அதனால முடியவில்லை. இதனால் சைவத்தமிழ்க் கல்வியின் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க ஆறுமுகநாவலர் உள்ளிட்ட அக்காலக் கல்வியியலார்கள் தீர்மானித்தனர். புதிய பாடத்திட்டம் நவீன சவால்களை எதிர்நோக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டது. பாடத்திட்டத்தினை உருவாக்கிய வேளையில் பாடத்திட்டத்திற்கு அமைவாகப் பாடநூல்களும் தேவையாக அமைந்தன. இத்தேவையைக் கருத்திற்கொண்டு பல பாடநூல்களைச் சைவத்தமிழ் ஆர்வலர்கள் எழுதி வெளியிட்டனர். ஆறுமுகநாவலர் இம்முயற்சிகளில் முன்னோடியாக விளங்கினார். மிஷனரிமாரின் பாடாசலைகளில் கற்ற, கற்பித்த காலங்களில் அவர்களது பாடநூல்களைப் படித்தும் கண்டும் பெற்ற அநுபவங்கள், சைவத்தமிழ்ச் சூழலுக்குத் தரமான பாடநூல்களைத் தரவேண்டும் என்ற ஆர்வ உணர்வு, பாடநூல்களை அச்சிடுவதற்குரிய அச்சக வசதிகளைப் பெற்றிருந்தமை போன்ற வாய்ப்புக்கள் அவரைப் பாடப்புத்தகங்களை வெளியிடும் பணியில் ஈடுபடுத்தின. நாவலரின் பாலபாடங்கள், சைவவினாவிடை, இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் காண்டிகையுரை முதலானவை சைவத் தமிழ் மாணவர்களின் பாடநூல் தேவையை நிறைவு செய்யும் விதத்திலே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. நாவலரின் பாடநூல் ஆக்க முயற்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கியத்துவம் பெற்றவை அவரின் பாலபாடங்களேயாகும்.

நாவலர் பாலபாடங்களை எழுதியதைத் தொடர்ந்து ஈழத்து சைவத்தமிழ்க் கல்விக்கு புது ஊட்டம் ஏற்பட்டது. அவரைத் தொடர்ந்து பலபேர் சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பலதுறை சார்ந்து பாட நூல்களை எழுதினர். சமயம், மொழி என்ற எல்லைகளுக்கு அப்பால் அறிவியல், கணிதம், புவியியல் முதலான துறைகள் சார்ந்தும் நூல்கள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மரபுவழிச் சைவத் தமிழ்க் கல்வியை நாவலர் நவீனமயப்படுதிய காலங்களில் அது சார்ந்து விமர்சனங்கள் பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு

வந்ததைக் காணலாம். குறிப்பாக உதயதாரகைப் பத்திரிகையின் ஐந்து இதழ்களில் சுதேச கல்விமுறை (Native Education) என்னும் உபதலைப்பின் கீழ் நாவலரின் பாடசாலை, பாடத்திட்டம் குறித்த விமர்சனங்கள் எழுதப்பட்டன. மிஷனரிமார்களால் விரும்பியோ, விரும்பாமலோ விமர்சிக்கப் படுகின்ற அளவுக்கு நாவலர் ஆரம்பித்த சைவத்தமிழ்க் கல்வி சமகாலத்தில் செல்வாக்குப் பெற்று வந்தமையையே இது காட்டுகின்றது.

நாவலரின் முதன்முயற்சியைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. நாவலரின் வழியை அடியொற்றி சைவத்தமிழ்ப் பற்றாளர்கள் இதில் ஆர்வத்துடன் செயற்பட்டனர். மரபுவழிச் சைவத்தமிழ்க் கல்விமுறைக்கு எதிராக எழுந்த சவால்களை எல்லாம் முறியடித்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க நாவலர் மரபு காட்டிய வழியே அவர்களுக்குப் பெரும் முன்மாதிரியாக அமைந்தது.

## சைவவித்யாபிவிருத்திச் சங்கம்

பாடசாலைகள் மட்டுமன்றிச் மரபுவழிச் சைவத் தமிழ்க் கல்வியில் ஆர்வங்காட்டிய பிற நிறுவனங்களும் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானது சைவவித்யாபிவிருத்திச் சங்கமாகும். 1923 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் 'கிராமங்கள் தோறும் சைவப்பாடசாலைகளை அமைத்தல்' என்னும் நோக்கத்தினை முன்வைத்துச் செயற்பட்டது. சேர். பொன் இராமநாதன். சு.இராசரத்தினம், சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி, அ. சபாபதி, எஸ். சிவபாதசுந்தரம் எஸ்.கந்தையா முதலானோர் இதன் ஆரம்பகால உறுப்பினர்களாக இருந்து சங்கத்தினை வழிநடாத்தினர். இவர்களுள் சு. இராசரத்தினம் அவர்களின் தன்னலம் கருதாத பங்களிப்பு என்றும் நினைவுகூரப்பட வேண்டியது. கிராமாம் தோறும் உள்ள சைவப் பெரியார்கள், கொடையாளிகள், நிலபுலச்சொந்தக்காரர்கள் ஆகியோரின் உதவி பெற்று சைவப் பாடசாலைகளை இச் சங்கம் ஸ்தாபித்து வந்தது. நெடுந்தீவு தொடக்கம் தீவுப்பகுதி, வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார், புத்தளம், நாவலப்பிட்டி, புசலாவை வரை 1924 தொடக்கம் 1960 வரை 163 பாடசாலைகள் (இவற்றுள் 7 ஆங்கிலப் பாடசாலைகள்) இச்சங்கத்தினால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தன (பேரம்பலம். க, 2010, 22-23). 1961

ஆம் ஆண்டு இப்பாடசாலைகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படும் போது இச்சங்கத்தின் முகாமையின் கீழ் 163 அதிபர்களும், 1500 ஆசிரியர்களும், 40,000 மாணவர்களும் இருந்தனர் என்பதை நோக்கும் போது இதன் மரபுவழிச் சைவத் தமிழ்க் கல்விக்கான பங்களிப்பு மேலுந் தெளிவுபடுகின்றது.

## திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை

சைவவித்யாபிவிருத்திச் சங்கத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்ட அமைப்பு திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையாகும். இந்துபோட் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்கிக் கொள்ளுதற் பொருட்டு 1925 ஆம் ஆண்டு இக் கலாசாலை நிறுவப்பட்டது. இக்கல்லூரி மிகவும் புகழ் பூத்த மரபுவழியறிஞர்களை விரிவுரையாளர்களாக கொண்டு விளங்கிற்று. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மௌனத் தவமுனிவர் பொ. கைலாசபதி, திருமதி செல்லத்துரை, நடராசா, சண்முகலிங்கம், இராசையா முதலானோர் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர்களாவர். இங்கு பயிற்சி பெற்ற மாணவர்கள் சைவபாரம்பரிய உடையில் விடுதிகளில் தங்கியிருந்து கல்விபெற்றமை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதோர் விடயமாகும். சுமார் 1500 வரையான ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை இக்கலாசாலைக்குண்டு. மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பிற்காலங்களில் தொடர்ந்து வளர்த்தெடுத்த ஆசிரியர்கள் பலர் இக்கலாசாலையினூடாவே வெளிவந்துள்ளனர்.

## சைவபரிபாலன சபை

நாவலரின் அடிச்சுவட்டில் அவர் முன்னெடுத்த சமய மற்றும் கல்விப் பணிகளை முன்னெடுத்த ஒரு நிறுவனமே சைவபரிபாலன சபையாகும். 1898 ஆம் ஆண்டு இது உருவாக்கப்படது. இதன் உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்டவர்கள் நாவலரின் மருகரான வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களும், அவரின் நன் மாணக்கருள் ஒருவரான த. கைலாசபிள்ளையுமாவர். இவர்களுடன் நீதிபதி ந. செல்லப்பாபிள்ளை, நியாயவாதி எஸ்.நாகலிங்கம், நியாயதுரந்தர் வீ. காசிப்பிள்ளை, திரு சி.த.மு. பசுபதிச்செட்டியார் முதலானோர் இணைந்து செயற்பட்டனர். சபையின் நோக்கங்களில் சைவசமயம், சைவக்கல்வி இரண்டும் முக்கிய பங்கினைப் பெற்றன. இரண்டினையும் வளர்த்தெடுக்கும் விதத்தினாலான செயற்பாடுகளை

அன்று தொட்டு இச்சபை முன்னெடுத்துவருவதனைக் காணலாம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தோற்றம் இச் சபையுடன் தொடர்புபட்டது என்பது குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும். 1886 இல் வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்பவரால் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் Native Town High School என்ற பெயருடன் நிறுவப்பட்ட ஆங்கிலப் பாடசாலை 1889 இல் திரு எஸ். நாகலிங்கத்தின் முகாமைத்துவத்தில் Town High School எனப் பெயர் மாறி சைவ பரிபாலன சபையால் பொறுப்பேற்கப்பட்டமை வரலாறு. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஓர் அம்சமாக இயங்கிய 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபை'யின் பணிகளும் நோக்கப்படத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. இச்சபையினூடாக வெளிவந்த இந்து சாதனம், Hindu Organ என்னும் பத்திரிகைகள் சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றின.

## பிற நிறுவனங்கள்

யாழ்ப்பாண மக்களிடையே நாவலர் ஊட்டிவிட்ட சைவ உணர்வினையும் பேணிய சமய நலன்களையும் தொடர்ந்தும் காப்பாற்றும் நோக்குடன் உருவாக்கப்பட்ட மற்றுமோர் அமைப்பு சைவப்பிரகாச சமாஜியம். இது1880 இல் உருவாக்கப்பட்டது. சங்கத்தின் பிரசார ஏடாகச் 'சைவ உதயபானு' என்னும் பத்திரிகையும் வெளியிடப்பட்டது. கொழும்பு விவேகானந்த சபை (1902), இராமகிருஷ்ண மிஷன் (1924) முதலானவையும் மரபுவழிச் சைவத்தமிழ்க் கல்வி மரபிற்குத் தம்மாலான பங்களிப்பினை நல்கிவருகின்றன. பின்னாளில் உருவாக்கப்பட்ட கொழும்புத் தமிழ்ச் சங்கம் (1942), யாழ்ப்பாணத்துக் கலாநிலையம், மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம் முதலானவற்றின் பணிகளும் நினைவுகூரப்பட வேண்டியவையே.

## முடிவுரை

மரபுவழிக்கல்வியினையும் அதன் ஊடாகத் தமிழர்தம் சமய, பண்பாட்டு உணர்வுகளையும் பெருமிதங்களையும் பாதுகாக்க உழைத்த நிறுவனங்கள் பற்றி இதுவரை நோக்கப்பட்டது. நவீனத்துவத்தினை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த ஈழச் சமூகத்தில் மரபுவழிக்கல்வி எதிர்நோக்கிய சவால்களையும் இடர்ப்பாடுகளையும் தடுத்து நிறுத்த முயன்றவை என்றவகையில் இந்நிறுவனங்களின் பணிகள் நோக்குதற்குரியவை. மரபுவழிக் கல்வியினை

அதன் சிறப்பும் தனித்துவமும் பெருமையும் மங்காது வளர்த்தெடுப்பதற்கு வேண்டிய தம்மாலான பணிகளை இவை ஆற்றி வந்துள்ளதைக் காணலாம். அதனூடாகப் பல ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த எமக்கேயுரிய பாரம்பரிய அறிவுச் சொத்தினை, பண்பாட்டுப் பொக்கிஷத்தினை அவை எதிர்காலச் சந்ததிக்குக் கையளித்து வந்தன. பல சவால்களையும் சமாளித்து மரபுவழிக் கல்வியைப் பாதுகாத்த இந்நிறுவனங்களின், அவற்றை இயக்கிய அறிஞர்களின் உள்ளுரம் பாராட்டத் தக்கது. கவர்ச்சி மிகுந்த நிறுவன ரீதியான கல்விக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவை ஒருகட்டத்தில் தளர்ந்தன என்பது உண்மைதான். எனினும், இன்றைய நிலையில் தமிழ்மொழி, சமயம் சார்ந்து ஏற்பட்டுள்ள அச்சங்கள், சவால்கள் பற்றிப் பேசுகின்ற வேளையில் இந்நிறுவனங்கள் அவற்றின் பங்களிப்புக்கள் குறித்து மீளவும் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

## உசாத்துணைகள்:


1. ஆறுமுகம், வ., யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வி மறுமலர்ச்சியின் பரிமாணங்கள், **அபிஜ்ஞானமாலா**, பேராசிரியர் வி. சிவசாமி மணிவிழாக் குழு, யாழ்ப்பாணம், 1995.
2. சிவலிங்கராஜா, எஸ்., **பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி மரபு**, குமரன் புத்தகம் இல்லம், கொழும்பு, 2000.
3. சரவணமுத்து, அ., யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் தமிழ்ப் பணியும், **ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க வெள்ளி விழா மலர்**, யாழ்ப்பாணம், 1950.
4. ஜெபநேசன், எஸ்., **இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2009.
5. பேரம்பலம், க., 'நாவலர் கலைத்தொண்டின் காவலன் இந்துபோட் இராசரத்தினம்', **சைவவித்யா**, சைவவித்யா அபிவிருத்திச் சங்கம், 2010.
6. குமரன், ஈ., 'ஈழத்தில் சைவத்தமிழ்க் கல்வியும் நவீனத்துவமும்', **சைவவித்யா**, சைவவித்யா அபிவிருத்திச் சங்கம், 2010.
7. நடராஜன், க.கி., 'கணேசையர்', **கணேசையர் நினைவுமலர்**, ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டகம், சுன்னாகம், 1960.
8. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, கு., **குமாரசாமிப்புலவர்**, புலவரகம் வெளியீடு, மயிலணி சுன்னாகம், 1970
9. அப்புத்துரை, சி., **ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு – முதலாம் பாகம்**, தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகம், 2007.